
## திராவிடத்தால் வாழ்கிறோம்

782

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

### `பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்'

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு குறித்தும், அதனால் தென் மாநிலங்கள் எதிர்கொள்ளப்போகும் அச்சுறுத்தல் குறித்தும், ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் முதல் ஆளாக பெரும் எச்சரிக்கை செய்தார். நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அத்தோடு விடாமல், அதுகுறித்து மார்ச் 22-ஆம் தேதி விவாதிக்க பல்வேறு மாநிலத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி முதல் பல்வேறு மாநிலத் தலைவர்கள் தமிழ்நாடு முதலமைச்சரை இதற்காகப் பாராட்டியுள்ளனர்.




‘புதிய கல்விக்கொள்கை’, ‘மும்மொழிக் கொள்கை’ என ஒன்றிய பா.ஜ.க. அரசால் திணிக்கப்படும் ஆபத்துகளுக்கு எதிராக, அதனை எதிர்த்து, அவற்றை மக்களுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் எடுத்துச் சொல்லி, சமூக நீதியைக் காக்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறார் நமது முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர். பாசிசத்திற்கு எதிராக ஜனநாயகத்தின் குரலாக ஒலிக்கிறார் என திராவிட மாடல் நாயகருக்குப் பலரும் ஆதரவளித்து வரும் நிலையில், அதையே தலைப்பாகக் கொண்டு ‘பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்’ என்ற நூலை உருவாக்கியுள்ளது கருஞ்சட்டைப் பதிப்பகம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின்போது, கழகத் தலைவர் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இந்த நூலைத் தயாரித்துள்ளார் இரா.மணிமுகிலன். ஒவ்வொரு தொகுதிக்கும் கழக ஆட்சி செயல்படுத்திய திட்டங்கள், செயல்படுத்த உள்ள திட்டங்களின் ஆவணமாகவும் இந்த நூல் இருக்கிறது. குறிப்பாக, கழகத் தலைவரின் தேர்தல் உரைகள், இந்தியாவைச் சூழ்ந்து வரும் பா.ஜ.க. பாசிச அபாயத்தை எடுத்துச் சொல்லும் வகையில், இருந்ததை அப்போதே மக்கள் உணர்ந்திருந்தனர்.

அந்த உரைகள் தற்போது நூலாக்கம் பெற்று, இன்று மாலை 6 மணி அளவில் சென்னை, அன்பகத்தில் வெளியிடப்படுகிறது. ‘திராவிட இயக்கத் தமிழர் பேரவை’யின் தலைவர் சுப.வீரபாண்டியன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் மதிவதனி ஆகியோர் நூல் குறித்து அறிமுக உரையாற்றவுள்ளனர்.

### ஃப்ளாஷ்பேக்



து.கோவிந்தசாமி




### தண்டையார்பேட்டை கிளைக் கழகத் திறப்புவிழா!

1974-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதியன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், தண்டையார்பேட்டை வட்டக் கழகத் திறப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் மணிக்கூண்டுத் திடலில், எனது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் என்.வி.நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கண்ணன், முன்னாள் மாவட்ட அவைத் தலைவர் அ.செல்வராசன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சீத்தாபதி, முன்னாள் மேயர் ஆர்.ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொள்ள வெகு சிறப்பாக நடைபெற்றது.

– **து.கோவிந்தசாமி,**
**முன்னாள் வட்டச் செயலாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### நம் வரலாறு

#### வெளி மாநிலப் பிரதிநிதிகள்!

1956-ஆம் ஆண்டு, மே மாதத்தில் கழகத்தின் இரண்டாவது மாநாடு திருச்சியில் நடைபெற்றது. கழகம் தேர்தலில் கலந்துகொள்வது குறித்து, வாக்கெடுப்பு நடத்தப்பட்ட அந்த மாநாட்டுக்கு சுமார் இரண்டு லட்சம் கழகத்தினர் திரண்டனர். பெங்களூரு, மலபார் மற்றும் மும்பை என வெளிமாநிலங்களில் இருந்தும், இலங்கை போன்ற வெளிநாடுகளில் இருந்தும் கழகத்தைச் சேர்ந்த 1,500 மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர்

54

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

சட்டமன்றத்தில் நீதிக்கட்சி அமைச்சரவையின் முதல் நடவடிக்கையே சென்னை மாகாண பார்ப்பனரல்லாத வகுப்பினருக்கு அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. பார்ப்பனர் அல்லாத சமூகங்களுக்கு அரசுப்பணியில் உரிய பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்ற பொருளில், பல்வேறு தீர்மானங்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் உச்சமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை முதன்முதலாக 16.09.1921 அன்று வெளியிடப்பட்டது. ‘பார்ப்பனரல்லாதோருக்கான வகுப்புரிமையில் நீதிக்கட்சி பெற்ற முதல்வெற்றி’ என இந்த அரசாணையைக் குறிப்பிடலாம்.

பார்ப்பன ஆதிக்கம் என்பது அரசுப்பணிகளில் மட்டுமின்றி, ஆங்கிலக் கல்வி பயில்வதிலும் மிகுதியாக இருந்தது. அதை மாற்றி, பார்ப்பனரல்லாதவர்கள் மக்கள்தொகை அடிப்படையில் வகுப்புரிமை கோருவதற்காகவே நீதிக்கட்சி உருவாக்கப்பட்டது.

வகுப்புரிமையை நிலைநாட்டும் வகையில், தகுதி- திறமைக்கு எதிரானது’ என்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார். அப்போது பேசிய அவர், “கல்லூரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தகுதியான விண்ணப்பதாரரைச் சேர்க்கவும் தகுந்த பயிற்சி அளிக்கவும் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு. மாணவர் சேர்க்கை குறித்து பல்கலைக்கழகம்தான் சரியான நடவடிக்கை எடுக்க முடியும்.

மாணவர் சேர்க்கையில் தலையிடும் கல்வி அமைச்சகத்தின் குறுக்கீடு கண்டிக்கத்தக்கது. மாணவர் சேர்க்கை என்பது முழுமையாக கல்லூரி முதல்வர்களிடம் விடப்பட வேண்டிய பணி. பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு இடம் வழங்குவதை நான் எதிர்க்கவில்லை. தகுதியுடைய பார்ப்பன மாணவர்களின் இடத்தைப் பறித்து, பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு உதவுவது என்கிற பெயரால் வழங்கக் கூடாது” என்று குறிப்பிட்டார்.

சத்தியமூர்த்தி அய்யரின் வாதத்தை வேறு வார்த்தைகளில், ‘இந்து ஏடு’ 14.09.1922 அன்று தனது தலையங்கமாகத் தீட்டியது. அதில்,

## தமிழர்களைத் தலைநிமிரச் செய்த இன உணர்வு!



ஓவியம் : ரவி பேலட்

‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’, ‘தென்னிந்திய மக்கள் சங்கம்’ ஆகிய அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் **‘திராவிடன்’, ‘ஜஸ்டிஸ்’, ‘ஆந்திர பிரகாசிகா’** உள்ளிட்ட பத்திரிகைகள் வெளிவந்ததின் விளைவாகப் பார்ப்பனரல்லாதாரிடையே திராவிட இன உணர்வு உருவானது. சென்னை நகரில் திராவிட சங்கங்களின் கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. அதன்வழி திராவிட இன உணர்வு வளர்ந்தது.

இவ்வாறு உருவான திராவிட இன உணர்வை, பார்ப்பனரல்லாதார் இயக்கம், சென்னை மாகாணம் முழுமையும் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தி வளர்த்தது. பார்ப்பனரல்லாத தலைவர்கள் மக்கள்திரள் கூட்டங்களில் பங்கேற்று, திராவிட நாகரிகத்தின் பெருமைகளை மக்களுக்கு எடுத்துரைத்தனர். பழந்தமிழர் அரசுகளின் பெருமைகளை எடுத்துக்கூறினர். திராவிட மரபின் வழி உருவான தமிழ்ப் பண்பாட்டின் மாண்பையும் பெருமையையும் விரிவாகக் கூறினர். இதனால், திராவிட இன உணர்வு பல்கிப் பெருகியது.

இவ்வாறு வளர்ந்த திராவிடத் தேசியம் பெற்ற முதல் வெற்றி என்பது, 1919-ஆம் ஆண்டின் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் மூலம், சென்னை மாகாண முஸ்லிம்கள் அல்லாத பொதுத்தொகுதிகளில் பார்ப்பனரல்லாதாருக்கு இடஒதுக்கீடு பெற்றதாகும். திராவிடத் தேசியம் உருவான காலத்தில் திராவிடர்கள் யார், பார்ப்பனரல்லாதார் யார் என்ற வினாக்கள் அடிக்கடி எழுப்பப்பட்டு, அதற்கு நீதிக்கட்சியினர், ‘பார்ப்பனர் தவிர, மற்ற அனைத்து வகுப்பினரும் திராவிடர்’ என்று பதில் கூறினர். இவ்வாறு பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராகவும் பண்பாட்டு மறுசீரமைப்பின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், பார்ப்பனரல்லாத வகுப்புகள் தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் ‘திராவிடத் தேசியம்’ உருவாயிற்று.

### பார்ப்பனரல்லாதாருக்கு அரசுப் பணி

1919-ஆம் ஆண்டின் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்திற்குப் பின் 1920-இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்த பின், 1921-இல் முதன்முறையாக சட்டமன்றம் கூடியபோது பார்ப்பனரல்லாத உறுப்பினர்களுக்குத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சட்டமன்றத்தில் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதார்க்கும் முஸ்லிம்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் தனித்தனிப் பகுதிகளில் இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்ததைக் கிண்டல் செய்த இந்து ஏடு (17.02.1921), “தென்னிந்திய சமூகங்களின் அகழாய்வுக் கண்காட்சியை சென்னை மாகாண கவர்னர் அமைத்திருக்கிறார்” என்று குறிப்பிட்டிருந்தது.

நீதிக்கட்சித் தலைவர்கள் உருவாக்கிய வகுப்புரிமை அரசாணை எனும் சமூகநீதிக் கொள்கை பார்ப்பனரல்லாதாருக்கு வழங்கப்பட்ட உரிமை. அந்த ஆணை பார்ப்பனரல்லாதார்கள் அரசுப்பணிகளில் நுழைவதற்கு உத்தரவாதம் வழங்கியது. அரசுப்பணிகளில் இடம்பிடிக்கவேண்டுமெனில், முதலில் அதற்குரிய கல்வியறிவைப் பெற்றிருக்கவேண்டும். எனவே, நீதிக்கட்சி அரசு, பார்ப்பனரல்லாதார்களுக்கு கல்வி புகட்டும் நடவடிக்கைகளில் இறங்கியது.

1922-இல் கல்லூரிகளில் தேர்வுக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. கல்லூரிகளில் சேருவதற்கு எந்த ஒரு குறிப்பிட்ட சாதிக்கும் மற்றவரை விஞ்சிய சிறப்புத் தகுதி இல்லை என்று தேர்வுக்குழுக்கள் கூறின. அக்குழுக்களில் நீதிக்கட்சியினர் இடம்பிடித்தனர். எடுத்துக்காட்டாக சென்னை மாநிலக் கல்லூரியின் தேர்வுக்குழுவில் எல்.ஏ.கோவிந்த ராகவ அய்யங்கார், முகமது உஸ்மான், எஸ்.இ.ரங்கநாதன், நடேசனார் உள்ளிட்டோர் இடம்பெற்றனர். தேர்வுக்குழு முடிவின் படி, 1922-23ஆம் ஆண்டில் பார்ப்பன மாணவர்களுக்கு 50% இடங்களும், பிற வகுப்பினருக்கு 50% இடங்களும் ஒதுக்கப்பட்டன. இதைப் பார்ப்பனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

1922-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற சென்னை பல்கலைக்கழகத்தின் செனட் கூட்டத்தில் எஸ்.சத்தியமூர்த்தி அய்யர் ‘பார்ப்பனரல்லாத வகுப்பினருக்குத் தேர்வுக்குழு நியமனங்கள் வழியாக கல்லூரிகளில் இடங்களை ஒதுக்குவதன் மூலம் கல்லூரி நிர்வாகத்திலும், கல்விக் கொள்கையிலும் அரசு தலையிடுகிறது. இது

> **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைதான் நீதிக்கட்சியின் கொள்கை.**

‘சென்னை மாகாண அரசு, அரசுப் பணிகளிலும் பதவி உயர்வுகளிலும் வகுப்புரிமையைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இக்கொள்கை மிகமோசமானதும், கண்டனத்துக்கு உரியதாகும்’ என்று எழுதியிருந்தது.

### வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புரிமையைப் பாதுகாக்கும் அரசியல் அதிகாரத்தின் மூலம், நீதிக்கட்சி பார்ப்பனரல்லாதவர்களுக்கு உதவியது. இதை நீதிக்கட்சியின் அரசியல் எதிரிகள், குறிப்பாக பார்ப்பனர்கள் பெருங்குறையாகச் சுட்டிக்காட்டினர். இதற்கெல்லாம் நீதிக்கட்சி சரியான முறையில் பதிலளித்தது. நீதிக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.இராமசாமி முதலியார் நீதிக்கட்சிக் கூட்டத்தில் பேசுகிறபோது, “நமது கட்சியின் அடிப்படைக்கொள்கை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தான். இது அரசுப்பணிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக அல்ல. ஒரு சிறிய அரசுப்பணியைப் பெறுவதற்கு நாம் போராடினாலும், அது அரசு அதிகாரத்தைப் பெறுவதற்காகத்தான். அரசுப்பணிகள் இந்தியமயமாக ஆகிறபோது, அது ஏன்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமாக ஆகக் கூடாது? இந்த வினா, பலமுறை எழுப்பப்பட்டது. அரசின் கொள்கை, பார்வை என்னவாக இருந்தாலும், நமது கொள்கையை ஏற்றுக்கொண்டு வகுப்புவாரி அரசாணையைப் பிறப்பித்துள்ளது” என்று குறிப்பிட்டார்.

அவர் குறிப்பிட்டது போல், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைதான் நீதிக்கட்சியின் கொள்கை. வகுப்புவாரிக் கொள்கையைச் செயல்படுத்தவே அரசியல் அதிகாரம், பதவி, கட்சி என்பவையெல்லாம் தேவை. வகுப்புவாரி அரசாணைக்குச் சட்டமன்றத்திற்குள்ளும் வெளியேயும் பார்ப்பனரல்லாதாரின் ஆதரவு இருந்தது. இவ்வாறு உருவான திராவிடத் தேசியம் என்ற இன உணர்வே வகுப்புரிமையை நிலைநாட்டி, தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. திராவிட இன உணர்வை ஊட்டிய நீதிக்கட்சியின் ஆட்சியில் தமிழர்கள் தலைநிமிரத் தொடங்கினர். திராவிடத் தேசியம் எனும் இன உணர்வு மென்மேலும் வளர்ந்தது.

**...குரல் ஒலிக்கும்**

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.